Tamil / தமிழ்

தகவல் தாள்

AEC
Australian Electoral Commission

# உங்களுக்கு 'கோவிட்-19' இருந்தால் வாக்களிக்கும் விதம்

BE COVIDSAFE

தேர்தல் நாளில் நீங்கள் 'கோவிட்-19' சோதனையில் பாசிட்டிவ் முடிவைப் பெற்று தனிமைப்படுத்தலில் இருப்பீர்களாயின், 2022 மே 21 சனிக்கிழமையன்று 'ஃபெடரல்' தேர்தலுக்கான வாக்குச் சாவடியில் நீங்கள் நேரில் வாக்களிக்க முடியாது.

மே 13 வெள்ளிக்கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 6.00 மணிக்குப் பிறகு 'கோவிட்-19' 'பாசிட்டிவ்' முடிவைப் பெற்றவர்களுக்கு 19 வியாழன் முதல் 21 சனிக்கிழமை வரை தொலைபேசி மூலம் வாக்களிக்க முடியும்.

நோய்த்தொற்று உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கும் ஒருவராக நீங்கள் இருக்கும் அதே வேளை, நோய் அறிகுறிகளோ, தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமோ உங்களுக்கு இல்லையென்றால், நீங்கள் வாக்குச் சாவடியில் நேரில் வாக்களிக்கலாம்.



## தொலைபேசி மூலம் வாக்களிக்கும் விதம்

### 1 பதிவு செய்யவும்

- 'உங்களுக்கு கோவிட்-19' இருக்கிறது என்ற முடிவைக் காண்பிக்கும் ஆதாரத்தை தயார்படுத்துங்கள். அதில் இருக்க வேண்டியவை:
  - PCR - என்றால் - பரிசோதனை செய்யப்பட்ட மையத்தின் அமைவிடம் , உங்கள் 'பாசிட்டிவ்' சோதனை முடிவின் தேதி, நேரம் மற்றும் உங்கள் சுகாதார அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட குறிப்பு இலக்கம் (கிடைக்குமாயின்)
  - RAT (துரித நோயறிவுச் சோதனை) என்றால் - சோதனியின் வர்த்தகப் பெயர் மற்றும் தொடர் எண் (கிடைக்குமாயின்) உங்கள் 'பாசிட்டிவ்' பரிசோதனையின் திகதி மற்றும் நேரம், மற்றும் உங்கள் 'பாசிட்டிவ்' பரிசோதனை முடிவை நீங்கள் பதிவு செய்த சுகாதார அதிகாரியிடமிருந்து பெற்ற குறிப்பு இலக்கம் (கிடைக்குமாயின்).

- **1800 413 960** என்ற இலக்கத்தை அழைத்து பதிவு செய்வதற்கு தேர்வு 1 ஐத் தெரிவுசெய்யவும். உங்கள் மொழியைப் பேசும் உரைபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமென நீங்கள் கேட்கலாம். அழைப்பின் போது, நீங்கள் 'கோவிட்-19' காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால், வாக்குச் சாவடிக்கு செல்ல முடியவில்லை என்று உறுதிமொழி கூறுமாறு நீங்கள் கேட்கப்படுவீர்கள் என்பதால் உங்களிடம் இருக்கும் ஆதாரத்தை தயாராக வைத்திருங்கள்.

- உங்களுக்கு எட்டு இலக்க தொலைபேசி-மூல வாக்களிப்புப் பதிவு எண் மற்றும் ஆறு இலக்க பாதுகாப்பான PIN ஒன்று SMS அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். நீங்கள் வாக்களிக்க அழைக்கும் போது நீங்கள் கட்டாயம் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

### 2 வாக்களிப்பு

**நீண்ட நேரம் அழைப்பிற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கலாம்.**

- உங்கள் தேர்தல் பிரிவுக்கான வாக்குச்சீட்டுகளின் படத்தைப் பார்ப்பதற்கு உங்கள் SMS அல்லது மின்னஞ்சலில் உள்ள இணைப்பிற்குச் செல்லவும்.

- உங்களின் எட்டு இலக்க பதிவு எண், PIN மற்றும் வாக்களிக்கும் விருப்பத்தேர்வுகளை தயாராக வைத்திருக்கவும்.

- **1800 413 960** என்ற இலக்கத்தை அழைத்து வாக்களிப்பதற்கு தேர்வு 2 ஐத் தெரிவுசெய்யவும். உங்கள் மொழியைப் பேசும் உரைபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமென நீங்கள் கேட்கலாம். தொலைபேசி இயக்குநர் உங்களிடம் கேட்கக் கூடியவை:
  - தொலைபேசி மூலம் வாக்களிக்க உங்கள் தகுதி பற்றி மற்றொரு உறுதிமொழியை மேற்கொள்ளல்
  - உங்கள் எட்டு இலக்க பதிவு எண் மற்றும் ஆறு இலக்க பாதுகாப்பான PIN-ஐக் கொடுக்கவும் (உங்கள் பெயர் அல்லது முகவரியைக் கொடுக்க வேண்டாம் - இது உங்கள் வாக்கு இரகசியமாக இருப்பதை உறுதி செய்கிறது)
  - உங்கள் வாக்குச் சீட்டின் படம் உங்கள் முன் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்
  - உங்கள் வாக்கைத் தொலைபேசி இயக்குநர் எவ்வாறு பதிவு செய்ய வேண்டுமென நீங்கள் விரும்புவதை விவரிக்கவும்
  - அழைப்பை முடிப்பதற்கு முன், நீங்கள் இவ்வாறுதான் வாக்களிக்க விரும்புகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்தவும்.

22-1681

# செயல்படும் நேரங்கள்

## இணையவழிப் பதிவு

| | | |
|---|---|---|
| திறக்கும் நேரம் | மே18 புதன்கிழமை | மாலை 6.01 AEST |
| முடியும் நேரம் | மே 21 சனிக்கிழமை | மாலை 4.00 AEST |

## தொலைபேசிப் பதிவு

| | | |
|---|---|---|
| | மே 19 வியாழன் | உள்ளூர் நேரப்படி காலை 8.30 முதல் மாலை 5.30 வரை |
| | மே 20 வெள்ளி | உள்ளூர் நேரப்படி காலை 8.30 முதல் மாலை 5.30 வரை |
| | மே 21 சனிக்கிழமை | உள்ளூர் நேரப்படி காலை 8.00 முதல் மாலை 4.00 வரை |

## தொலைபேசியில் வாக்களித்தல்

| | | |
|---|---|---|
| | மே 19 வியாழன் | உள்ளூர் நேரப்படி காலை 8.30 முதல் மாலை 5.30 வரை |
| | மே 20 வெள்ளி | உள்ளூர் நேரப்படி காலை 8.30 முதல் மாலை 6.00 வரை |
| | மே 21 சனிக்கிழமை | உள்ளூர் நேரப்படி காலை 8.00 முதல் மாலை 6.00 வரை |

மே 21 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு வாக்குப்பதிவு முடிவடையும் போது நீங்கள் பதிவுசெய்து வாக்களிக்க வரிசையில் காத்திருந்தாலும் உங்களால் வாக்களிக்க முடியும்.

# உங்கள் வாக்கு பாதுகாப்பானது

தொலைபேசி வாக்களிப்பின் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதற்கான நடைமுறைகள், 'ஆஸ்திரேலிய தேர்தல் ஆணையம்' ஒரு வாக்குச் சாவடியில் மேற்கொள்ளும் நடைமுறைகளைப் போலவே இருக்கும், இது 'தேர்தல் சட்ட'த்திற்கு இணக்கமானதாகும்




தேர்தல் ஆணையாளர், கான்பெரா. Electoral Commissioner, Canberra.